


விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அவலூர்பேட்டை ஊராட்சியில் நடைபெற்ற "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் டாக்டர் சையத்ஹபிஸ், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், அவலூர்பேட்டை நகர நிர்வாகிகள் நடராஜன், அர்ஷத் பேக், ஆர்.எஸ். செல்வம், பாலமுருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



நெல்லை மாநகராட்சி தச்சை மண்டலம் பகுதியில் ரூபாய் 23 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி மையம் அமைப்பதற்கான கட்டுமான பணிகள் அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று அடிக்கல் நாட்டினர். நிகழ்வில் துணை மேயர் ராஜு,மண்டல தலைவர் ரேவதி பிரபு,மாநகர துணை செயலாளர் பிரபு மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர் சங்கர், கோகுலவாணி சுரேஷ்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, மாநகர பிரதிநிதி பால் இசக்கி,வட்டச் செயலாளர் பிரேம் கணேசன்,பகுதி துணைச் செயலாளர் சீனிவாசன், மாநகர உதவி பொறியாளர் பட்டு ராஜன்,வட்ட செயலாளர் ராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோவை குறிச்சி 'சிட்கோ' தொழிற்பேட்டையில்

# தங்கநகைப்பூங்கா அமைப்பது குறித்து ஆலோசனை!

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் பங்கேற்பு!

கோவை, மே 21 –

கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா வர்த்தக கூட்டரங்கில் நேற்று முன்தினம் (19.05.2025) குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் மூலம் குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தங்க நகை பூங்கா அமைப்பது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை கூடுதல் தலைமை செயலாளர் மரு.அதுல் ஆனந்த், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன மேலாண் இயக்குநர் / அரசு முதன்மை செயலாளர் ஏ.கார்த்திக், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க. கிரியப்பனவர், தொழில்துறை ஆணையர் எஸ்.நிர்மல் ராஜ், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன பொது மேலாளர் எஸ்.தனலிங்கம் மற்றும் தங்க நகை தயாரிப்பாளர் சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் சிட்டார்க் நிறுவனம் சார்பில் 9.97 கோடி மதிப்பீட்டில் மின்வாகன மோட்டார் சோதனைக்கான பொதுவசதி மையத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்றது.

பின்னர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

உலக அளவில் தங்க நகை உற்பத்தியில் முக்கிய மையமாகவும், தொழில் நகரமாகவும், விளங்கும் கோயம்புத்தூருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த நவம்பர் மாதம் சிட்கோ குறிச்சி தொழிற்பேட்டையில் ரூ.126 கோடி மதிப்பில் தங்க நகை பூங்கா அமைக்கப்படும் என அறிவித்தார்கள். MSME துறையின் மூலம் தங்க நகை பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொண்டு தற்போது முழு திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளது. இதனடிப்படையில், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 2.46 ஏக்கர் பரப்பளவில், 8 லட்சத்து 57 ஆயிரம் சதுர அடியில் கட்டிடம் கட்டப்பட உள்ளது.

இதில், தங்க நகைப் பட்டறைகள், தங்க நகை உற்பத்திக்கான பொது வசதி மையம், 3D பிரிண்டிங் மற்றும் லேசர் கட்டிங் வசதிகள், ஹால்மார்க் தரப் பரிசோதனைக் கூடம், பாதுகாப்பு பெட்டகம், கண்காட்சிக் கூடம், கூட்ட அரங்கம், பயிற்சி மையம், அதிநவீன கண்காணிப்பு வசதிகள், வாகனநிறுத் துமிடம் என பல்வேறு சிறப்பு அம்சங்களுடன் இந்த திட்டம் தயாரிக்கப் பட்டுள்ளது.

இன்றைய கூட்டத்தில் கோயம்புத்தூரில் உள்ள 18 க்கும் மேற்பட்ட தங்க நகை உற்பத்தியாளர் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளார்கள். தற்போது, இந்த திட்டம் குறித்து இக்கூட்டத்தில் விளக்கப்பட்டது. அரசு மிக கவனத்துடன் திட்டத்தை தயாரித்து இருந்தாலும், உங்களுக்கு தேவையான வசதி கள் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின் உங்களுடைய ஆலோசனைகளை வழங்கலாம். இந்த கூட்டத்தில் தங்க நகை உற்பத்தியாளர்கள், சங்க நிர்வாகிகளின் சார்பில் வழங்கப்பட்ட கோரிக் கைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர் களின் கவனத்திற்கு கொண்டு சென்று நிறைவேற்றி தர நடவடிக்கை மேற் கொள்ளப்படும். இந்தியா விலேயே மிகச்சிறந்த தங்க நகை பூங்காவாக இந்தபூங்கா அமையவுள்ளது. என கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரி வித்தார்.

ஒருநாட்டின் பொருளாதார வளர்ச் சிக்கு உறுதுணையாக இருப்பது குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங் கள்தான். அந்நிறுவனங்களை பாதுகாக்கவும், வளர்ப்பதற்காகவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல் வேறு திட்டங் களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கள் ளப்பாளையம், மோப்பிரிப்பாளையம் ஆகிய இரண்டு இடங்களில் கொடிசியா தனியார் தொழிற்பேட்டை ரூ.44. 32 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.22.20 கோடி திட்ட மதிப்பீட்டில் 1.49 ஏக்கர் பரப்பளவில் 618 தொழிலாளர்கள் தங்கும் வகையில் தொழிலாளர் தங்கும் விடுதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மார்ச் மாதம் திறந்து வைப்பட்டது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ரூ.8.80 கோடி மதிப்பில் பொள்ளாச்சி கயிறு குழுமம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணி ஜீலை மாதம் முடிக்கப்படும். சொலவம் பாளையத்தில் ரூ.18.06 கோடி மதிப் பீட்டில் கொசிமா தனியார் தொழிற் பேட்டை பணிகள் நடைபெற்று வருகி றது. 2 மாதத்திற்குள் பணிகள் முடிக்கப்படும். கிட்டாம்பாளையத்தில் ரூ.24. 61 கோடி மதிப்பீட்டில் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டை இறுதி கட்டப் பணி ஜீன் மாதத்திற்குள் முடிக்கப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் ரூ.14.85 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.7.94 கோடி மானியத்துடன் மின்வா கன மோட்டார் பரிசோதனை மையம் அமைக்கும் பணி தொடங்கப்பட உள் ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, நீட்ஸ் திட்டத் தின் கீழ் ரூ.43.27 இலட்சம் திட்ட மதிப் பீட்டில் ரூ.10.49 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள பொறியி யல் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் கே.எஸ்.எம். இன்டஸ்ட்ரீஸ் நிறுவனத் தையும், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடி திட்டத்தின் கீழ் ரூ.66 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ.18.65 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள பொறியியல் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்யும் கே.பாலோ கண்ட்ரோல் நிறுவனத்தை யும், ரூ. 4.55 கோடி திட்ட மதிப்பீட்டில் ரூ.1.18 கோடி மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள சுகாதார சானிட்ரி நாப்கின் உற்பத்தி செய்யும் ஷாரஸ் வென்ச்சர் நிறுவனத்தையும், ரூ.48.60 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் ரூ.11.45 இலட்சம் மானியம் பெற்று அமைக்கப்பட்டுள்ள ஆயத்த ஆடை கள் தயாரிக்கும் ஏ.பி. டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தையும், பிரதம மந்திரி உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் திடடத்தின் கீழ் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தில் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் அமைக்கப் பட்டுள்ள தொழில் வளர் மையத்தை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் அவர்கள் தொடங்கி வைத்து நேரில் பார்வையிட்டார்.

முன்னதாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் சிட்டார்க் நிறுவனம் சார்பில் 9.97 கோடி மதிப்பீட்டில் மின் வாகன மோட்டார் சோதனைக்கான பொதுவசதி மையத்தை அமைப்பதற் கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடை பெற்றது.

2030 ஆம் ஆண்டில் 100 பில்லி யன் டாலர் என்ற ஏற்றுமதி இலக்கை தமிழ்நாடு அடைய, தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களால் 2021 செப்டம்ப ரில் தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கை வெளியிடப்பட்டது. தமிழ் நாட்டில் ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொரு ட்டு, தமிழ்நாட்டில் ஏற்றுமதி நிறு வனங்களுக்குத் தேவையான பொதுக் கட்டமைப்புகளை உருவாக்க 100 கோடி ரூபாய் சிறப்பு நிதி உருவாக்கப்படும். தொழிற்சாலைகள், தொழில் கூட்ட மைப்பினர் பங்களிப்புடன், திறன்சார்ந்த மையங்கள், பரிசோதனை மையங் கள். ஏற்றுமதி கிடங்குகள், உள்நாட்டுக் கொள்கலன் கிடங்குகள் போன்ற கட்ட மைப்புகளை அமைப்பதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.


இதற்கிணங்க, கோயம்புத்தூரில் உள்ள சிட்டார்க் (Si'Tarc) நிறுவனம் சமர்ப்பித்த மின் வாகன (EV) மோட்டார் சோதனைக்கான பொது வசதி மையத்தை (Common Facility Centre CFC) அமைப்பதற்கான திட் டத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட் டது. இந்த மையம், 369/188,189, பொள்ளாச்சி சாலை, குறிச்சி SIDCO தொழிற்பேட்டை, கோயம்புத்தூர் 641 021 என்ற முகவரியில் அமைக்கப்பட உள்ளது. திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 9.97 கோடி ஆகும். இந்த மொத்த மதிப்பீட்டில் ரூ.8.97 கோடி ஏற் றுமதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங் கப்பட உள்ளது. மேலும் மீதமுள்ள ரூ.1 கோடி, சிட்டார்க் (Si'Tarc) நிறுவனம் பங்களிக்கவுள்ளது. இந்த மையத்திற் காக கொள்முதல் செய்யப்படும் இயந் திரங்கள் மற்றும் உபகரணங்கள் அனைத்திற்கும் FaMeTN நிறுவனமே உரிமையாளராக இருக்கும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சிட்டார்க் (Si'Tarc) நிறு வனம் 23.09.2024 அன்று SITARC EV FOUNDATION என்ற பெயரில் ஒரு சிறப்பு நோக்கு முகமை (Special Purpose Vehicle) உருவாக்கியுள்ளது. திட்டத்தை சரியான முறையில் செயல் படுத்துவதற்கும் கண்காணிக்கப்படுவ தற்கும் FaMe TN நிறுவனத்திற்கும் சிட்டார்க் (SITarc) நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறப்பு நோக்கு முகமை (SPV), இயந்தி ரங்கள் மற்றும் தளவாடங்கள் கொள்மு தல் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளி யினை விரைவில் வெளியிடவுள்ளது. அனைத்து பணி களும் 12 மாத காலத் திற்குள் முடிக்கப்பட்டு இச்சோதனை மையம் செயல்பாட்டிற்கு வரும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் இரா. கோவிந்தசாமி
### மே 21 (1995)



**கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே உறுப்பினராகி, சாலவாக்கம் கிளைச் செயலாளராகி பணியாற்றி வந்ததுடன், அருகில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் கழகக் கொள்கைகளை விளக்கி நாடகங்கள் மூலமாக பிரச்சாரம் செய்து வந்தவர். தலைமைக் கழக பேச்சாளராக திகழ்ந்தவர்.**

**அறிஞர் அண்ணாவின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட இவர், உத்திரமேரூரில் 1965ல் தனது தலைமையில் மொழிப் போராட்டத்தை நடத்தி, ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றவர்.**

**மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவல் துறையினரால் கடுமையாக தாக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் துவக்கி வைக்கிறார்!

# கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியத்தில் மாநில அளவிலான மாபெரும் கபடி போட்டி!

### அமைச்சர்கள் கே.என்.நேரு – எஸ்.ரகுபதி – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – சிவ.வீ.மெய்யநாதன் மற்றும் கே.கே.செல்லப்பாண்டியன் பங்கேற்பு!

புதுக்கோட்டை, மே 21 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் கந்தர்வ கோட்டை தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் ஆண்கள், பெண்கள் கபடி போட்டி மே 23, 24, 25 ஆம் தேதி மாலை 5 மணி அளவில் மங்களா கோவில் கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.

முதல் நாள் நிகழ்ச்சிக்கு புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமை வகிக்கிறார். மங்களா கோவில் கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.பரமசிவம் வரவேற் புரையாற்றுகிறார். நகராட்சி நிர்வாக துறை அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, இயற்கை வளங்கள் மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய் யாமொழி, பிற்படுத்தப்பட் டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், தாட்கோ சேர்மன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் நா.இளையராஜா, எம்.எம். அப்துல்லா எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் வை.முத்துராஜா, எம்.சின்னதுரை, வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு. சண்முகம் முன்னாள் எம்.எல்.ஏ. பெரியண்ணன் அரசு, கந்தர்வ கோட்டை தொகுதி பொறுப் பாளர் சி குறிஞ்சிவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆண்கள் பெண்களுக் கான முதல் ஆட்டத்தை துவக்கி வைத்து தமிழ்நாடு துணை முதலமைச்சர், மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விழா பேருரை யாற்றுகிறார்.

மாநில கழக நிர்வாகிகள் கவிச்சுடர் கவிதைப்பித்தன், வி.என்.மணி, அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை, த.சந்திரசேகரன், பி.டி.அரச குமார், கே.ஆர்.என்.போஸ், சுப.சரவணன், புதுகை விஜயா, எம்.எஸ்.அசோக் பாண்டியன், மாவட்டக் கழக நிர்வாகிகள் அரு.வீர மணி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ் வரி, எம் லியாகத்அலி, கீரை தமிழ் ராஜா, வி.ஆர்.பி.ஆர் ஆர். ஆதித்யா துரைராஜா, ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.சுப்பிரமணியன், எம். ராஜேந்திரன், கே.ராஜேந் திரன், சு.குஞ்சப்பா, பி. ரவிச்சந்திரன், ராதிகா கருப் பையா, எஸ்.கோவிந்தன், டி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்ஆர். கலையரசன் நன்றி கூறுகி றார்.

இரண்டாம் நாள் 24 ஆம் தேதி நிகழ்ச்சிக்கு புதுக் கோட்டை வடக்கு மாவட் டச் செயலாளர் கே.கே. செல்லப்பண்டின் தலைமை வகிக்கிறார். கந்தர்வ கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் மா. தமிழ் ஐயா வரவேற்புரையாற்றுகிறார். ஆண்களுக்கான ஆட்டத்தை தஞ்சை மாநகர மேயர் சண். ராமநாதன், பெண்களுக்கான ஆட்டத்தை புதுக்கோட்டை மேயர் திலகவதி செந்தில் துவக்கி வைக்கின்றனர்.

தவ.பாஞ்சாலன், மு.க. ராமகிருஷ்ணன் வெ.முத்து கிருஷ்ணன், என்.சேட்டு, கே.எஸ்.சந்திரன், மு.பி.ம. சத்தியசீலன், சி.சண்முகம், ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, ஓ.எஸ்.வெங்கடாசலம், அ.இளங்குமரன், கே.பி. ஐயப்பன், ஆர்ஆர்.சாமி நாதன், பொதுக்குழு உறுப் பினர்கள் இரா.செல்லத்துரை, இராசு.சந்தோஷ், என். சாத் தையா, தென்னலூர் எம். பழனியப்பன், ராப்பூசல் செந்தில்குமார், சிஆர்வி. சித்ரா, பேரூர்ச் செயலாளர்கள் உ.முருகேசன், ப.அண்ணா துரை, வை.விஜயகுமார், எம்.எஸ்.ஏ.முகமது ரிஷா, வடக்கு ஒன்றியக் கழக நிர்வாகிகள் மு.சண்முகம், ஆர்.முத்துக்குமார், ஆசை. பாலகிருஷ்ணன், ஆர்.முரு கேசன், என்.அம்பிகாபதி, ஜி.கலியபெருமாள், என். கலைச்செல்வி, கு.புஷ்ப ராஜ், அணிகளின் துணை அமைப்பாளர்கள் க.அரங்க ராஜன், மு.வேலுமயில், பாஸ்கர், ஏழுமலை, எம். ஆர்.சண்முக பிரபு, கழக முன்னோடிகள் எடிசன், சுப்பிரமணியன், ஆறுமுகம், ஆதிமூலம், ராமசாமி, செல் லத்துரை, ராமராஜன், முரு கேசன், காமராஜ், முத்து சாமி, மகேந்திரன், தர்மராஜ், முருகேசன், செல்வராஜ், முத்துக்குமார், ரங்கராசு, உருமையா, துரையரசன், ரத்தினம், தங்கமுத்து, ரத்தி னம், முருகேசன், செந்தில், தனபால், கருப்பையா, ரங் கசாமி, ரெங்கசாமி, அப்துல் ஹமீது, சுதாகர், சுப்பிரமணி யன், சண்முகம், செல்லத் துரை, லட்சுமணன், பாண் டித்துரை, பன்னீர்செல்வம், கோபால், ஸ்டுடியோ கண் ணன், கண்ணுச்சாமி, சீனி வாசன், கருப்பையா, தங்க ராஜ், பன்னீர்செல்வம், பால முருகன், விஜயேந்திரன், பழனிவேல், காசிநாதன், தாமரைச்செல்வம், முருகே சன், ராஜேந்திரன், சித்ரா, ராஜசேகர், சதாசிவம், பழனி ராஜ், தியாகபூபதி, பாண் டிச்செல்வம், சுப்பிரமணி யன், முரளிதரன், மோகன், முருகதாஸ் ஆகியோர் முன் னிலை வைக்கின்றனர்.

முனியாண்டி, கிருஷ்ண மூர்த்தி, கோவிந்தராஜ் நன்றி கூறுகின்றனர்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி 25ஆம் தேதி நடைபெறு கிறது. புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலா ளர் கே.கே.செல்லபாண்டி யன் தலைமை வகிக்கிறார்.

கந்தர்வகோட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் மங் களா கோவில் எம்.பரமசிவம் வரவேற்புரையாற்றுகிறார். எம்.ராஜா, எம்.கருப்பையா, டி.சூசை, ராஜ், கே.எஸ்.ச. இளையசூரியன், புத்தாப்பூர் எம்.சுப்பையா, டி.எம்.ஆர் ராமமூர்த்தி, வி.ஜிஆர். மணி வண்ணன், வி.என்.எம். பாலு, தவசுமணி, அ.பிரபா, சி.அரங்கநாயகம், எஸ்.வி. ஆர்.ஜெய் ஸ்டாலின், கவி வேந்தன், செந்தாமரைபாலு, ஆர்.டி.ஆர்.ராமசாமி, மு.க. முத்துகருப்பன், ஏ. விஜயா, பொன். பாரிவள்ளல், கா. இளவரசன், வே.ராஜேஷ், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், எம்.சிவக் குமார், அன்சாரி பாசித் ஆகி யோர் முன்னிலை வகிக்கின் றனர்.

ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து பரிசு வழங்குகிறார். பெண் களுக்கான இறுதி ஆட் டத்தை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் துவக்கி வைத்து பரிசு வழங்குகிறார்.

கந்தர்வகோட்டை ஒன் றிய, மாவட்ட துணை அமைப்பாளர்கள் அப்துல் ரஷீத், என்.ஜானகிராமன், ச.அர்ஜுனன், தாமரை பழ னிவேல், பி. கோவிந்தராஜ், எம்.பாலு, எஸ்.கருணாநிதி, சதீஷ்குமார், ஒன்றிய இளை ஞர் அணி துணை அமைப் பாளர்கள் எம்.நமச்சிவாயம், ஆர்.அசோக் குமார், எஸ். ஆனந்தராஜ், டி ராஜ்குமார், ஏ.பிரகாஷ், ஏவி.சுரேஷ் குமார், இளையராஜா, டி. ராஜதுரை, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி ஆர். சீனிவாசன், என்.வினோத் குமார், சசிகலா, பிரகதீஸ் வரன், முன்னாள் கவுன்சி லர்கள் எம்ஆர்கே. முருகே சன், திருப்பதி, வைரக் கண்ணு, முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கள் அருணாச்சலம், செல் லப்பிள்ளை, குணசேகரன், மதியழகன், ராமராஜ், வெள்ளாளவிடுதி, மங்களா கோவில் கிளை கழக நிர்வா கிகள் முத்துகலியன், முனி யாண்டி, பெரியதம்பி, கண் ணையன், சோழன் நாகராஜ், முருகதாஸ், ஆறுமுகம், ராமையா, நாகராஜ், கோவிந்தராஜ், சடையன், ரங்கசாமி, ரங்கராஜ், வடி வேல், பன்னீர்செல்வம், கர்ணன், முருகேசன், சந்தி ரன், பாக்கியராஜ், தன பால், வீரமுத்து, சத்யராஜ், முகமது ஹனிபா, துரை, அஞ்சய்யன், ரங்கசாமி, பூபதி, பாலகிருஷ்ணன், சாமிக்கண்ணு, திருப்பதி, கணேசன், பெரியசாமி,, ஜெய்சங்கர், கோவிந்தராஜ், மகாலிங்கம், வீரமுத்து, ராஜலிங்கம் ஆகியோர் பங் கேற்கின்றனர்.

மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் கே.எம்.முருகேசன் நன்றி யுரை கூறுகிறார்.

ஆண்கள் அணிக்கான பரிசுகள் முதல் பரிசு ஒரு லட்சத்து 50 ஆயிரம், இரண் டாவது பரிசு ரூ.1 லட்சம், 3ம் பரிசு 50,000, 4ம் பரிசு ரூ.50,000, பெண்களுக்கான பரிசுகள் முதல் பரிசு ரூ. 1 லட்சம், இரண்டாம் பரிசு 75 ஆயிரம், மூன்றாம் பரிசு 40 ஆயிரம் நான்காம் பரிசு 40 ஆயிரம் வழங்கப்படு கின்றன.

வி.ஆர்.திருமலை துரை ராஜா கல்லாக்கோட்டை ஜமீன்தாரர், எஸ்.வாசுதே வன், தொழிலதிபர் காரைக் கால் சோலை எம்.ராஜா, தமிழ்நாடு அமெச்சூர் கப டிக் கழகத் தலைவர், ஏ.சபி யுல்லா தமிழ்நாடு அமெச் சூர் கபடிக் கழகச் செயலா ளர், கோல்ட் ராஜேந்திரன் சென்னை மாவட்ட அமெச் சூர் கபடிக் கழகச் செயலா ளர், கல்யாணசுந்தரம் சிவ கங்கை மாவட்ட அமெச்சூர் கபடிக் கழகச் செயலாளர், தியாக. கலையரசன் தஞ்சா வூர் மாவட்ட அமெச்சூர் கபடிக் கழகச் செயலாளர், கபடிப் போட்டி ஒருங்கி ணைப்பாளர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொள்கின்றனர்.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கழகத்தின் மூத்த முன்னோடி, தமிழ்நாடு முன்னாள் வேளாண்மை துறை அமைச்சர் ஐயா ஏ.ஜி. என்கின்ற ஏ.கோவிந்தசாமி அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு, 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மணலூர்பேட்டை ஆஞ்சநேயர் கோவில் அருகே அமைக்கப்பட்ட அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவு அஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்வின் போது மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.